# சப்பிரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
# வலய கல்விப் பணிமனை – எம்பிலிபிடிய

செயலட்டை

வாரம்- 05 31/மே/2021

தரம் - 08 கர்நாடக சங்கீதம் 04/ஜுன்/2021

## கீதம்

- கீதம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படியாகும்.
- சங்கீத அப்பியாச முறையில் அலங்காரத்திற்குப் பின் கற்பிக்கப்படும்.
- உருப்படிகளில் மிகவும் எளிமையானது.
- ஒரே காலத்தில் பாடப்படும்.
- கீதத்தில் அங்க வித்தியாசம் கிடையாது.
- சங்கதிகளும் கடின வகர்ப்பிரயோகங்களும் கீதங்களில் காணப்படமாட்டாது.
- கீதத்தின் சாகித்தியத்தின் இடையே இஅய, வஇய போன்ற சொற்கள் காணப்படும் இதனை மாத்ருகா பதங்கள், கீத அலங்காரச் சொற்கள் என்றழைப்பர்.
- கீதம் ஆரம்பம் முதல் இறுதிவரை தொடர்ச்சியாக பாட வேண்டும்.
- கீதங்கள் தமிழ், கன்னடம், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன.
- கீதம் சுலபமான இசையிலும், ஆதி, ரூபக தாளங்களிலும் அமைந்திருக்கும்.
- கீதத்தின் பிரிவுகள் - 1. சஞ்சாரி கீதம்
  2. இலட்சணகீதம்
- சஞ்சாரி கீதத்தின் மறு பெயர்கள்˙ சாமான்ய கீதம், லஷ்ய கீதம்
  * இக்கீதத்தின் சாகித்தியம் பகவத்ஸ்தோத்திரமாகவோ, வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ அமைந்திருக்கும்.
- கீதம் எந்த இராகத்தில் அமைந்துள்ள்தோ அந்த இராகத்தின் இலட்சணக்கைக் சாகித்தியத்தின் மூலம் விளக்குவது இலட்சண கீதமாகும்.
  - o இலட்சண கீதங்களின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கத்திலிருந்த இராகங்களைப் பற்றி அறியக் கூடியதாக உளள்து.
  - o இலட்சணகீதத்தின் பிரிவுகள் -1. ஜனகராகங்களில் அமைந்த இலட்சணகீதம்
    2. ஜன்னியராகத்தில் அமைந்த இலட்சணகீதம்
  - o ஜனகராகங்களில் அமைந்த இலட்சணகீதத்தின் மறுபெயர் : இராகாங்க இராக இலட்சணகீதம்
- சஞ்சாரி கீதங்களை இயற்றிய மகான்கள் : புரந்தரதாஸர், பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
- இலட்சண கீதங்களை இயற்றிய மகான்கள் : பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள், வேங்கடமகி
- சஞ்சாரி கீதத்திற்கு உதாரணம˙ : கணநாதா - மாயாமாளவகொளை சிவபெருமானே மத்தியமாவதி
- இலட்சண கீதத்திற்கு உதாரணம் : முகாரிராகம் - முகாரி
  : பிலஹரிராகம் - பிலஹரி

செயற்பாடு : 01

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

01.கீதம் எவ்வகையான உருப்படி ?

02.கீதத்தற்கு முன் பாடப்படும் உருப்படி எது?

03.கீதத்தின் 2 வகைகளையும் குறிப்பிடுக

04.கீதங்கள் அமைந்துள்ள மொழிகளை பட்டியளிடுக.

05.சஞ்சாரி கீதத்தின் மறுப்பெயர்களை குறிப்பிடுக.

06.சஞ்சாரி கீதத்திற்குஉதாரணம் 2 தருக.

07.இலட்சண கீதம் என்றால் என்ன?

08.இலட்சண கீதத்திற்கு உதாரணம் 2 தருக.

09.கீதம் எவ்வகையான உருப்படி?

10.கீதத்தின் இலட்சணம் 3 எழுதுக.